# பொதுக்காலம் 33ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

நமது பகிர்வால் ஏழைகள் ஏற்றம் பெற்றிட வேண்டும் என்பதை நினைவுறுத்தும் அகில உலக ஏழையர் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு அன்புடனே அழைக்கப்பட்டிருக்கிறோம்.

ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் என்றாலும் பொருளில்லாமல் இவ்வுலகத்தில் அவர்களின் பாடுகள் மிகவும் வேதனைக்குரியதாய் இருக்கிறது. உழைப்பு என்பது சுரண்டப்படுவதால் முதலாளி வளமாகிறான்; உழைப்பாளி வறுமையாகிறான். ஏழ்மையை ஏளனம் செய்யாமல் வாழ்க்கைப் போராட்டத்தில் அவர்களுக்கு தோள் கொடுப்போம்.

இன்றைய முதல் வாசகத்தில், நல்ல மனையாளின் நற்பண்புகளையும், சிறப்புகளையும் எடுத்துரைக்கிறது நீதிமொழிகள் நூலின் வார்த்தைகள். நல்ல மனையாள் பவளத்தை விட மேலானவள் என்கிறது நீதிமொழிகள். மரத்தின் விழுதுகளாக பிள்ளைகள் இருக்கலாம். மரத்தின் வேராக இருப்பவள் மனைவி ஆவாள்.

இல்லதன் இல்லவள் மாண்பானால் உள்ளதன்

இல்லவள் மாணாக் கடை.

என்கிறார் வள்ளுவர். சிறந்த குணமுள்ள மனைவியே ஒருவனுக்குச் செல்வம் என்பது இக்குறளின் பொருள்.

அழகு அற்றுப் போகும்;

செல்வம் சிறுத்துப் போகும்;

குணம் குறையாமல் காத்துக் கொள்ளும்.

இன்றைய நற்செய்தியில் தாலந்து உவமையை எடுத்துக் கூறி உழைப்பின் பெருமையையும் சோம்பேறியாய் இருந்தவன் பெற்ற தண்டனையையும் எடுத்துரைக்கிறார் இயேசு. உள்ளவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனிடமிருந்து எடுக்கப்படும். இங்கு உள்ளவன் என்பது திறமையும் உழைப்பும் முயற்சியும் உள்ளவன். இவற்றை வெளிப்படுத்த தாலந்தை பன்மடங்கு ஆக்குகிறான். இல்லாதவன் என்பவன் உழைக்காது சோம்பியிருப்பவன். சோம்பேறியாய் இருந்தால் கையிலிருப்பதும் கரைந்து மேலும் ஏழ்மையாகிறான்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம். உழைப்பே சிறப்பு என்பதை நிதம் கொள்வோம். ஏழைக்கு இரங்குகிறவன் இறைவனுக்கு கடன் கொடுக்கிறான் என்பதை மனதில் கொள்வோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. எளியோராய் வாழுங்கள் என்றவரே எம் இறைவா!

எமது திரு அவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், திருச்சபைப் பணியாளர்கள் எளிய மனத்தோராய் வாழ்ந்து, இறைமக்களிடையே பகிர்வு மனப்பான்மையை வளரச் செய்து, ஏழ்மை என்பதை நீக்க வழிசெய்ய வேண்டுமென இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. தாலந்துகளைத் தந்து வழிநடத்துபவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளுவோர் தாலந்துகளைப் பயன்படுத்தவும், திறமையோடும் நேர்மையோடும் நல்லாட்சி செய்யவும், முதலாளிகளுக்கான அரசாக அமையாமல், ஏழை மக்களுக்கான அரசாக அமைய, மக்களின் ஏழ்மையைப் போக்கி, நாட்டை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லும் நல்லறிவு தந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நல்மனையாளாய் வாழ அழைப்பவரே எம் இறைவா!

குடும்பங்கள் குழப்பங்கள் இல்லாமல் திருக்குடும்பமாய் செயல்படவும், திருமணம், கணவன், மனைவி, உறவுகள் பிரமாணிக்கமாய் விளங்கவும், முறைகேடான உறவுகள், நெறிதவறிய வாழ்க்கை போன்ற அவலங்கள் சமுதாயத்திலிருந்து களையப்படவும், நல் எண்ணங்கள் கொண்டவர்களாக பெண்கள் குடும்பத்தைக் கட்டி எழுப்ப வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் என்றவரே எம் இறைவா!

எங்கள் சமூகத்தில் பொருளாதாரத்தில் பின்னடைந்து, அன்றாடத் தேவைகளுக்காக தவித்து நிற்கும் சகோதர சகோதரிகளுக்கு மனமுவந்து பொருளாதார தேவைகளில் உதவி புரியும் நல் மனம் தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. வறுமையை வளமாக்குபவரே எம் இறைவா!

பருவமழை பொய்க்காது பெய்யவும், நீர்நிலைகள் நிரம்பி முதன்மை தொழிலாகிய விவசாயம் சிறக்கவும், உணவுத் தேவை நிறைவாகவும், குடும்ப அமைதி, மகிழ்ச்சி நிறைந்து, உள்ளத்தின் தேவைகள் இறைவனால் சந்திக்கப்படவும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com